**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 200** **நாள் : 06.12.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்ட சிறப்பு விழிப்புணர்வு முகாம் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை சார்பாக நோய்த்தடுப்பு மற்றும் தூய்மை இந்தியா திட்டம் குறித்து பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் சென்னை மாநகர் முழுவதும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

சிறப்பு நிகழ்வாக, இன்று (06.12.2018) அண்ணாநகர் மண்டலம், வில்லிவாக்கம், சிட்கோ நகரில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் சென்னை மண்டல மக்கள் தொடர்பு அலுவலகமும், பெருநகர சென்னை மாநகராட்சியும் இணைந்து தூய்மை இந்தியா திட்ட சிறப்பு விழிப்புணர்வு முகாம் நடத்தியது. இதில், மண்டல மக்கள் தொடர்பு அலுவலகத்தின் கூடுதல் தலைமை இயக்குனர் ஏ. மாரியப்பன், இ.த.ப., அவர்கள் தலைமையேற்று தொடங்கி வைத்தார். பெருநகர சென்னை மாநகராட்சி, தலைமை பொறியாளர் திரு. N.மகேசன் அவர்கள் விழிப்புணர்வு பேரணியினை கொடியசைத்து துவக்கி வைத்து மற்றும் போட்டியில் வெற்றி பெற்ற மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் சுமார் 700 மாணவியர்களும் மற்றும் 25 ஆசிரியர்களும் பங்கு பெற்றனர்.

இம்முகாமில் தூய்மை இந்தியா திட்டத்தின் முக்கியமான நோக்கங்கள், அதனை நிறைவேற்றுவதில் அனைவரின் பங்கு, தூய்மைக்கான மதிப்பீடு–2019, முறையாக சோப்பு உபயோகித்து கைகழுவுவதன் மூலம் தவிர்க்கப்படும் நோய்கள், குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என்று வகைப்பிரித்து அளித்தலின் முக்கியத்துவம், பிளாஸ்டிக் உபயோகிப்பதினால் ஏற்படும் சுகாதார கேடுகள், டெங்கு காய்ச்சல் தடுப்பு முறைகள் ஆகியவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. நாடக குழுவினரை கொண்டு விழிப்புணர்வு நாடகமும் நடத்தப்பட்டது.

பின்னர், மாணவியர்கள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணி பள்ளியை சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெற்றது. பேரணியில் மாணவியர்கள் தூய்மை இந்தியா விழிப்புணர்வு சம்பந்தமான பதாகைகள் மற்றும் பேனர்களுடன் ஊர்வலமாக சென்று விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை பொதுமக்களிடையே வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சுகாதார கல்வி அலுவலர் முனைவர் T.G சீனிவாசன், மண்டல அலுவலர் M. பரந்தாமன், மண்டல செயற்பொறியாளர் நாச்சான், மண்டல மக்கள் தொடர்பு அலுவலகத்தின் முதுநிலை ஓவியர், திரு. காளிதாஸ், குட்வில் டிரஸ்ட் இயக்குநர், துப்புரவு மேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர் மற்றும் மாநகராட்சி ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**